# கைத்தொழிற்புரட்சி

1700 ஆம் நூற்றாண்டில், கைவினைஞர்கள் நூல் பின்னுதல், மற்றும் நெசவுத்தொழில் செய்து வாழ்ந்தார்கள். தொடர்ந்து, வேகமாக தொழிற்படும்விதத்தில் இயந்திரங்கள் உருவாக்கப்பட்டன. இதுவே பிரித்தானியாவில், தொழிற்புரட்சி தொடங்குவதற்கு வித்திட்டது.

**கைத்தொழிற்புரட்சி பிரித்தானியாவில் தொடங்குவதற்கு காரணம்**

மற்றைய ஐரோப்பிய நாடுகளை ஒப்பிடுகையில், பிரித்தானியாவின் சனத்தொகை குறைவாக இருந்தபோதிலும், கைத்தொழிற்புரட்சி அங்கு தொடங்குவதற்கு பல காரணங்கள் இருந்தன. விவசாயப்புரட்சி, கப்பற் துறை, கடல்வளம், நிலக்கரிவளம் மற்றும் அரசியல் மற்றும் அறிவியல் சுதந்திரம் என்பன முக்கிய காரணங்களாக இருந்தன.

பிரித்தானியவில் பெருமளவு விவசாயிகள் வாழ்ந்தனர். செல்வந்த நிலப்பிரபுக்கள் பெருமளவு நிலங்களையும், சிறிய விவசாயிகள் சில நிலப்பகுதிகளையும் வைத்திருந்தனர். விவசாயப்புரட்சியானது செல்வந்த நிலப்பிரபுக்கள் பாரிய நிலப்பரப்புகளை பெற்றுக்கொள்வதற்கும், சிறிய விவசாயிகள் நகரங்களுக்கு இடம் மாறுவதற்கும் வழிவகுத்தது. இதன்மூலம், விவசாயிகள் மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குமான வசதியையும் செய்தது. இது குறிப்பிடத்தக்க அளவு மேலதிக மூலதனத்திற்கு வழிவகுத்தது.

1800 களின் ஆரம்ப காலங்களில், மிகப்பெரிய உலக வல்லரசாக பிரித்தானியா திகழ்ந்தது. பிரித்தானியாவின் கடல் ஆளுமை, அந்நாட்டிற்கு வணிகப்பாதைகளை பெற்றுக் கொடுத்ததுடன், காலனித்துவ நாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கும் வழிவகுத்தது. பிரித்தானியாவின் வர்த்தகத்துறை, கனரக தொழிற்துறைக்குத் தேவையான மூலதனத்தையும் பெற்றுக் கொடுத்தது.

பிரித்தானியாவில் இருந்த விறகுப் பற்றாக்குறை, அந்நாடு வெப்பமூட்டுவதற்கான புதிய வளங்களைத் தேடவேண்டிய தேவையை ஏற்படுத்தியது. பூமியின் மேற்பரப்பிற்கு அடியில், இலகுவாக நிலக்கரியைக் கண்டுபிடிக்கக்கூடியதாக இருந்தது. தொடர்ந்து நிலக்கரித் தேவை அதிகமாகியதால், பூமிக்கடியில் ஆழமாக தொடர்ந்து தோண்ட வேண்டிய நிலை உருவாயிற்று.

பிரித்தானியாவில் புதிய கண்டுபிடிப்புகளுக்கான அரசியல் சூழ்நிலை காணப்பட்டது. 1688களிலிருந்து பேச்சுச்சுதந்திரத்திற்கு காரணமான «The glorious revolution», கண்டுபிடிப்புகளுக்குான விஞ்ஞான முன்னேற்றத்துக்கும், புதிய யோசனைகளுக்கும் வழிகோலியது. பிரித்தானியா அரசானது காத்திரமானதாகவும்,மக்குளால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தால் ஆளப்பட்டதும், குதிய கண்டுபிடிப்புகளுக்கும், புதிய தொழில்நுட்பங்களுக்கும் கைத்தொழில் வளர்ச்சிக்கும் அடிப்படையானது.

இயந்திரங்கள், தொழிற்சாலைகளில் சேகரிக்கப்பட்டதுடன், பெரிய நகரங்கள் வளர்ந்துவரத் தொடங்கின.

Maskiner plasseres i fabrikker

நுரல் சுற்றதல், நெசவுத்தொழில் போன்றவை பெண்களின் தொழிலாகவே இருந்தது. பல விவசாயக்குடும்பங்கள், நூல் நூற்பு, மற்றும் நெசவுத்தொழில் மூலம் கூடுதல் சம்பாதிப்பைப் பெற்றன. ஆனால், புதிய இயந்திரங்களை இயக்க வலுவான உடற்தசைகள் தேவை. இதனால் **நூல்** மற்றும் நெசவுத் துணிகளின் துருப்பிடிக்காத வரை இப்போது பெண்களின் கலாச்சாரம் இருந்தது. பல விவசாய குடும்பங்கள் வீட்டில் நூல் மற்றும் நெசவு துணிகள் நூற்பு மூலம் கொஞ்சம் கூடுதல் சம்பாதித்தனர். ஆனால் புதிய இயந்திரங்கள் வலுவான தசைகள் தேவை, மற்றும் ஆண்கள் வேலை நிறைய எடுத்து. நூற்பு ஆலைகளில் நூற்றுக்கணக்கான ஆண்கள் வேலை செய்யலாம். இயந்திரங்கள் நல்ல தரமான ஆடைகளை கிழித்து நெய்தன. ஆங்கில தொழிற்சாலை விரைவில் உலகம் முழுவதும் துணி மற்றும் ஆடைகளை விற்றது.

`மஞ்செஸ்டர்` முதலாவது பெரிய தொழிற்துறை நகரம் ஆகும். தொழிற்துறைப்புரட்சி முதலில் புடவை ஆடைத் தொழிலில் தொடங்கியது. இங்கிலாந்தில் மக்கள் தொகை அதிகரித்தது. பெரும்பாலான மக்களுக்கு மலிவான ஆடைகள் தேவைப்பட்டன. இத்தேவை ஒரு சந்தையை உருவாக்கியது. மூலப்பொருளான பருத்தியை பிரித்தானியர் தமது ஆட்சியின் கீழ் இருந்த நாடுகளின் காலனிகளில் இருந்து எடுத்து வந்தனர். பயன்படுத்தப்பட்ட நூல்நூற்கும் முறைகளும் தறிகளும் போதுமானதாக இருக்கவில்லை. எனவே, பிரித்தானியர் புதிய நூல்நூற்கும் இயந்திரங்களையும், உடைகளைத் தயாரிக்கும் இயந்திரங்களையும் கண்டுபிடித்தனர். இதன் மூலம் நெசவு தொழில் உற்பத்தி அதிகரித்தது.

### இரும்பு, நிலக்கரி உற்பத்தி

புதிய இயந்திரங்கள் இரும்பு மற்றும் வேறு உலோகங்களால் செய்யப்பட்டன. மேலும் சமுதாயத்தின் தேவை அதிகரித்தது. அப்போது இரும்பையும் உலோகங்களையும் உருக்குவதற்குப் புதிய வழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஒரு தொழிற்சாலையின் சொந்தக்காரன் «ஆபிரகாம் டார்பி» நிலக்கரியைப் பரிசோதனை செய்தார். அவர் முதன்முதலாக நிலக்கரியின் இன்னொரு வடிவமான கரி (மற்றொரு வகையான நிலக்கரி) யாக மாற்றி அமைக்கும் முறையைக் கண்டுபிடித்தார் அதன் மூலம் இரும்பை உருக்கி எடுக்கும் முறையைக் கண்டுபிடித்தார். இதன் பின் இரும்பு உற்பத்தி வேகமாக அதிகரித்தது.

நிலக்கரிச் சுரங்கங்களில் இருந்து எடுக்கப்பட்டதால் சுரங்கங்கள் ஆழமாகத் தொடங்கின. இதனால் நிலத்துக்கு அடியில் உள்ள நீர் மேலே வரத்தொடங்கியது. அந்த நீரை, நீராவி மூலம் இயங்கும் விசையியக்க குழாய்கள் மூலம் அகற்றப்பட்டன. சுரங்கங்களில் வேலை செய்வது ஆபத்தாகவும் கடினமாகவும் இருந்தது. ஆனால் காலப்போக்கில் புதிய இயந்திரம் வந்ததால் வேலை இலகுவாக்கப்பட்டது.

உயர்ந்துள்ள நிலத்தடி நீரை ஒரு நீராவி இயந்திரத்தால் இயக்கப்படும் குழாய்களைப் பயன்படுத்தி அகற்றப்பட்டது.

**நீராவிஇயந்திரம்**

நீராவி இயந்திரத்தின் கண்டுபிடிப்பு பிற்காலத்தில் தொழிற்புரட்சியை முன்னெடுத்து செல்வதற்கு உதவியாக இருந்தது. 1712 ஆம் ஆண்டில் தோமஸ் நியூகோமன் வடிவமைத்த முதலாவது நீராவி இயந்திரம் நிலக்கரிச் சுரங்கங்களில் இருந்து நீரை வெளியேற்றுவதற்கு உதவியது. 1776 ஆம் ஆண்டில் பேர்மிங்காமில் இருந்த ஒரு நிலக்கரி சுரங்கத்தில், ஜேம்ஸ் வாட்டினால் உருவாக்கப்பட்ட ஒரு புதிய நீராவி இயந்திரம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அவரது இயந்திரம் பழையதைவிட வலுவானதாகவும் சிறந்ததாகவும் இருந்தது. இது நெசவுநெய்வதற்கும் நூல்நூற்பதற்கும் இரும்புத்தொழிலுக்கும் கப்பல்களுக்கும் புகையிரதங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. இதனால் ஒரு புதிய சகாப்தம் உருவாகியது.

**தொழிற்புரட்சிக்காலம் தொடங்கியது.**

1851 ஆண்டில் இலண்டனில் ஒரு பெரிய உலகக் கண்காட்சி நடைபெற்றது. உலகின் பல நாடுகளில் இருந்தும் தங்கள் பொருட்களை மக்களுக்கு பார்வைக்கு வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் அரைவாசிக்கும் மேலான பொருட்கள் இங்கிலாந்திலிருந்து வந்தன. எனவே இங்கிலாந்து "உலக தொழிற்சாலை" எனப் பெயர் பெற்றது.

**போக்குவரத்து அமைப்பு உருவானது**

புதிய தொழிற்சாலைகளுக்கு சிறந்த போக்குவரத்துச் சேவை தேவைப்பட்டது. அவர்கள் தயாரிக்கப்பட்ட பொருட்களை மக்களுக்கு

வழங்கவும், வெவ்வேறு மூலப்பொருட்களை எடுத்துச் செல்வதற்கும் சிறந்த போக்குவரத்து தேவைப்பட்டது. தெற்கு, மத்திய இங்கிலாந்துப் பகுதிகளில் பல கால்வாய்கள் கட்டப்பட்டன. ஒரு ஸ்கொட்டிஷ் பொறியாளர் ஜோன் மெக் ஆடாம் சாலைகளை அமைப்பதற்கு ஒரு சிறந்த வழியைக் கண்டுபிடித்தார். அவர் கண்டுபிடித்த வழி மழையால் பாதிக்கப்படாதவாறு அமைக்கப்பட்டது. இப்போது கிராமப்புறப் போக்குவரத்து எளிதாகிவிட்டது. குதிரைகள் பெரியவண்டிகளில் மக்களையும் அஞ்சல்களையும் இழுத்துச் சென்றன. சாலைகள் வழியே பயணியர் விடுதிகள், சிறிய தங்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டன. சுரங்கங்களில் உள்ள, தண்டவாளத்தில் நிலக்கரி ரயில் பெட்டிகளை குதிரைகள் இழுத்துச் சென்றன. இப்போது வாட்ஸ் நீராவி இயந்திரம் ஒரு வண்டியில் வைக்கப்பட்டு அதை அது ஒரு வாகனமாக்கப்பட்டது. எல்லாம் எளிதாகவும் திறமையாகவும் மாறியது.

1814 ஆம் ஆண்டில், ஜார்ஜ் ஸ்டீபன்சன் முதல் நீராவி இயந்திரத்தை உருவாக்கினார். ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் அவர் உலகின் முதல் தொடருந்துப் பாதை கட்டப்பட்டது. இது வட இங்கிலாந்தில் ஸ்டாக்டன் மற்றும் டார்லிங்டன் நகரங்களுக்கு இடையே பிரயாணத்திற்கு உபயோகிக்கப்பட்டது.

பல இடங்களில் விரைவில் தொடருந்துப் பாதை கட்டப்பட்டது. இறுதியில், நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு இயந்திரங்கள் தயாரிக்கப்படலாம். தந்தி மூலம் பொருட்களை ஆர்டர் செய்ய முடியும். மக்கள் முன்பை விட அதிகமாக செயற்பட்டனர்.

1712

1764

1768

1771

1785

தோமஸ் நியூகொம்மின் முதலாவது நீராவி இயந்திரம் சுரங்கங்களில் இருந்து தண்ணீரை வெளியேற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. நூல்நூற்கும் இயந்திரம்" ஜென்னி" கையினால் இயக்கப்பட்டது. பின் நீர்ச்சக்தி நூல் இயந்திரங்களுக்கு இணைக்கப்பட்டன. முதலாவது முறையாக ஜேம்ஸ் வாட்ஸ்சின் நீராவி இயந்திரத்தை நூல் நூற்பு இயந்திரங்கள், நூல் சுற்றும் தொழிற்சாலைக்குப் பயன்படுத்தப்படுத்தினர்.

வினாக்கள்

1. இங்கிலாந்தில் இயந்திரங்கள் வருவதற்கு முன், மனிதன் எப்படிப் பொருட்களை உற்பத்தி செய்தான்?

2. பணக்காரர்கள் ஏழை விவசாயிகளிடம் இருந்து நிலத்தை வாங்கிய போது ஏழை விவசாயிகளுக்கு என்ன நடந்தது?

3. இந்தக் காலப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு கண்டுபிடிப்புகளைக் கூறுக?

4. நூல்நூற்கும் இயந்திரமான " ஸ்பின்னிங் ஜென்னி " யைக் உருவாக்கியவர் யார்?

5. ஏன் நூல் நூற்கும் தொழில் படிப்படியாக ஆண்களின் தொழிலாக மாறியது?

6. இங்கிலாந்தில் முதல் முதலாக உருவான பெரிய தொழிற்சாலைகளைக் கொண்ட தொழிற்துறை நகரம் எது?

7. ஆபிரகாம் டார்பி என்ன கண்டுபிடித்தார்?

8. ஜேம்ஸ் வாட் எதில் பிரபல்யமானார்?

9. ஜார்ஜ் ஸ்டீபன்சன் எதில் பிரபல்யமானார்?

10. உலகின் முதல், தொடருந்துப் பாதை எங்கே உருவானது?

11. இங்கிலாந்தில் இயந்திரக்காலம் ஏன் ஆரம்பித்தது?

## புதிய தொழிலாளர்கள்

பல சிறிய விவசாயிகள், நூல்நூற்பவர்கள் மற்றும் நெசவாளர்கள் கிராமப்புறங்களில் இருந்து நகரங்களுக்கு வேலை தேடிச் சென்றனர். அவர்கள் கிராமப்புறங்களில் இருந்ததைவிட நகரங்களில் வித்தியாசமான வாழ்க்கையை நடாத்தினார்கள். தொழிற்சாலைச் சொந்தக்காரர்கள் அதிக பணம் சம்பாதித்தார்கள். எனவே, தொழிலாளிகள் ஒரு நாளுக்கு 14 - 15 மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டியிருந்தது. சம்பளம் குறைவாக இருந்தது. அநேகர் வாழ்க்கை நடத்துவதற்கு போதுமான பணத்திற்காக மேலதிக செய்ய வேண்டியிருந்தது, வேலை நாட்களில் அவர்களுக்கு ஓய்வு நேரம் இல்லை. விடுமுறை என்ற வார்த்தை கேள்விப்பட்டதே இல்லை.

ஒரு நாளில் நீண்டநேரம் வேலை செய்ததால் மக்கள் மிக அதிகமாக உள்ளேயே இருந்தனர். தொழிற்சாலைகள் சூடாக இருந்தன. அத்துடன் காற்று, அதிகமான அளவு தூசிகளாலும் வாயுக்களாலும் நிரப்பப்பட்டிருந்தது. ஜன்னல்களைத் திறக்க தடைவிதிக்கப்பட்டது, இதனால் பல தொழிலாளர்களுக்கு சுவாசப் பிரச்சனைகள் மற்றும் நுரையீரலில் நோய்கள் ஏற்பட்டன.

அதைவிட, இயந்திரங்கள் ஆபத்தானவை. அதனால் அடிக்கடி விபத்துக்கள் நடந்தன. ஆனால் கிட்டத்தட்ட யாரும் புகார் செய்ய முன்வரவில்லை, ஏனென்றால் மக்கள் தங்கள் வேலைகளை இழந்துவிடுவோமோ என்று பயந்தார்கள். யாராவது பிழையாக அல்லது ஆறுதலாக மெதுவாக வேலை செய்திருந்தால், அவர்களுக்கு அடி விழும் அல்லது மற்ற வழிகளில் தண்டனை வழங்குவர். தொழிலாளர்களுக்கு எந்த உரிமையும் இல்லை.

**நகரங்களில் தொழிற்சாலைகளில் முன்னேற்றம்.**

புதிய தொழிலாளர்களுக்கு வாழ்வதற்கு இடம் தேவைப்பட்டது. அவர்கள் தொழிற்சாலைகளைச் சுற்றி குடியேறினார்கள், இதனால் நகரத்தில் மக்கள் தொகை வேகமாக அதிகரித்தது. இலண்டனில், 1800 ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் மக்கள் தொகை ஒரு மில்லியனாக அதிகரித்தது. 1850 ஆம் ஆண்டில் மக்கள்தொகையில் சுமார் அரைவாசி மக்கள் இங்கிலாந்தில் நகரங்களில் வாழ்ந்தனர். மக்கள் சுகவீனமடைந்தனர். பலர் தைபாய்டு, காலரா அல்லது காசநோய் ஆகியவற்றால் இறந்தனர்.

தொழிலாளர்களின் புதிய வீடுகள் மிகவும் மோசமானவை. வீடு கட்டும் பணியாளர்கள் விரைவாக பணம் சம்பாதிக்க விரும்பினர், அதனால் அவர்கள் ஒளி, காற்று, நீர் மற்றும் கழிவுநீர் வசதி இல்லாத வீடுகளைக் கட்டினார்கள். முழுக் குடும்பமும் ஒரு அறையில் ஒன்றாக வாழ்ந்தார்கள். பலர் குளிரான பாசிகளும் காளான்களும் நிறைந்த நிலவறையில் வாழ்ந்தார்கள். வீடுகளுக்கு வெளியே தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்ட நிலக்கரி சுடும் புகை இருந்தது. மக்கள் நோய்வாய்ப்பட்டனர். பலர் டைபாய்டு, காலரா அல்லது காசநோய் ஆகியவற்றால் இறந்தனர்.

பெண்களும் குழந்தைகளும் மிகவும் கஷ்டப்பட்டனர். பெண்கள், ஆண்களை விட மிகவும் கடினமாக உழைத்தாலும், பெண்கள், ஆண்களை விடக்

குறைந்தளவிலேயே ஊதியம் பெற்றனர். ஆண்கள் குடும்பத்தலைவனாய் பார்க்கப்பட்டதால் அதிக ஊதியம் ஆண்களுக்கு வழங்கப்பட்டது.

பல பெண்கள் குழந்தைகளுடன் தனியாக வாழ்ந்தாலும் அவர்களுக்கு எந்த உதவியும் இல்லை. கர்ப்பிணிப் பெண்கள் குழந்தை பிறக்கும் வரையில் வேலை செய்தார்கள். குழந்தை பிறந்த பிறகு, இரண்டு வாரங்களுக்கு வேலைக்குப் போகத் தேவையில்லை, ஆனால் அவர்களுக்குச் சம்பளம் கிடையாது. அவர்கள் மறுபடியும் வேலைக்குச் செல்லும்போது, அவர்கள் குழந்தையையும் வேலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் அல்லது யாராவது குழந்தையைப் பராமரித்துக்கொள்ள வேண்டும்.

குழந்தைகள் தொழிற்சாலைகளில் வேலை செய்தனர். பெரியவர்களை விட ஆபத்தான இயந்திரங்கள் கீழ் குழந்தைகள் எளிதாகச் செல்லக்கூடியவர்களாய் இருந்தார்கள். குழந்தைகள் குறைந்த ஊதியம் பெற்றனர்.

சுரங்கங்களில் வேலை செய்த குழந்தைகளின் நிலை மிகவும் மோசமாகக் காணப்பட்டது. ஐந்து வயதில் இருந்து, குழந்தைகள் நிலக்கரியை வண்டியின் பெட்டிகளில் தூக்கிப்போட்டு, பெரியவர்கள் செல்லமுடியாத மலைகளின் இடையே உள்ள சிறிய பாதைகளின் ஊடே அவற்றை இழுத்துச் செல்ல வேண்டும்.

சிறுவர்கள் வேலை செய்யாவிட்டால் அல்லது மிகவும் சோர்வாக இருந்தால், அவர்களுக்கு அடிப்பார்கள். பல பெற்றோர்களுக்கு மேலதிகப் பணம் தேவைப்பட்டது. இதனால் அவர்கள் தம் குழந்தைகளை வேலை செய்ய அனுமதித்தனர்.

## தொழிலாளர்கள் எதிர்ப்பு

தொழிலாளர்கள் கஷ்டமான வாழ்க்கை வாழ்ந்தார்கள். அவர்கள் நோய்வாய்ப்பட்ட போது அவர்களுக்குப் பணம் கிடைக்கவில்லை. அவர்களுக்கு கிட்டத்தட்ட எந்த உரிமையும் இல்லை. அவர்கள் ஒரு நாளின் கூடுதலான பகுதி நேரத்திற்கு வேலை செய்தார்கள்.

## வயது

படிப்படியாக பலர் இந்த இக்கட்டான நிலைமைகளுக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்தனர். குறிப்பாக, குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் மிகக் குறைவான ஊதியம் கிடைப்பதாக பலர் நினைத்தார்கள். இதனால் மக்கள் தங்களைப் பாதுகாக்க சட்டங்கள் தேவை என்றுணர்ந்தார்கள். எட்டு

வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் தொழிற்சாலைகளில் வேலை செய்யக் கூடாது என்றும் எட்டுவயதிற்கும் பதினைந்து வயதிற்கும் உட்பட்ட குழந்தைகளுக்கு வேலைக்கு அடுத்தபடியாக கல்வி அறிவும் பெறவேண்டும் என்றும் விரைவில் முடிவு செய்யப்பட்டது. 1850 ஆம் ஆண்டில் பெண்களும் குழந்தைகளும் ஒரு நாளைக்கு 10.5 மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்யக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டது. அத்துடன் ஆண்கள் 12 மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்யக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டது.

கார்ல் மார்க்ஸ் தொழிலாளர்களின் தத்துவவாதியானார். வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்த தொழிலாளர்கள் இதே போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கினர். எனவே, அவர்கள் ஒருவருக்கொருவர் ஒரு வழியில் தொடர்பானவர்கள் என்று உணர்ந்தனர். தத்துவவாதியான கார்ல் மார்க்ஸ் தொழிலாளர்களின் நிலைமைகள் பற்றிச் சிந்தித்தார். தொழிற்சாலைகளில் சம்பாதிக்கப்பட்ட பணம், தொழிற்சாலைகளில் வேலை செய்யும் அனைவருக்கும் சமமாக பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்று கார்ல் மார்க்ஸ் கருதினார். தொழிற்சாலைகளின் பணக்கார உரிமையாளர்களை முதலாளிகள் வர்க்கம் என்றும், அதே நேரத்தில் ஏழை தொழிலாளர்களை பாட்டாளிகள் வர்க்கம் என்றும் அழைக்கப்பட்டனர்.

தொழிற்சாலைகளுக்கும் தொழிற்சாலை இயந்திரங்களுக்கும், முதலாளிகளும் தொழிலாளிகளும் சேர்ந்து உரிமையாளர்களாக இருக்க வேண்டும் என்று மார்க்ஸ் கருதினார். அப்படி இருந்தால் யாரும், யாரையும் அடிமைப்படுத்த முடியாது. மார்க்ஸ் "அனைத்து நாடுகளிலும் இருக்கும் பாட்டாளி வர்க்கமே ஒன்றுபடுங்கள்" என்றார்.

வினாக்கள்

1. புதிய தொழிற்சாலைகளில் யார் வேலை செய்தார்கள்?

2. இங்கிலாந்தில் மக்கள் தொகை மிக வேகமாக அதிகரித்த ஒரு நகரத்தினை குறிப்பிடுக.

3. தொழிற்சாலைகள் நிறைந்த புதிய நகரங்களில் மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை விளக்குங்கள்?

4. ஒரே வேலை செய்தாலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஏன் வெவ்வேறு ஊதியம் பெற்றார்கள்?

5. கார்ல் மார்க்ஸ் எதனால் பிரபல்யமானார்? அவரது ஒரு படத்தை இணையத்தின் வலையத்தளத்தில் கண்டுபிடித்து உங்கள் பயிற்சிப்புத்தகத்தில் ஒட்டவும்.

ஆதாரங்கள்:

கொஸ்மோஸ் 10, ஜான் ஹரால்ட் நோமடால், ஸ்ரோல பொரோதன்

போர்தால்

பெரிய நோர்வேஜ மொழி அகராதி